# கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திருவுருவச் சிலை திறப்பு!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

ஊர்வலக் குழுவினரின் செலவில் அமைக்கப்பட்டது. அப்போதைய பொதுப்பணித் துறை அமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்களால் 14.1.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும், என்.எஸ். கிருஷ்ணன் அவர்களது திருவுருவச் சிலை ஜி.என். செட்டி சாலையில் கட்டப்பட்ட மேம்பாலம் பணிக்காக 26.2.2008 அன்று அகற்றப்பட்டது. பின்னர், மேம்பாலப் பணிகள் முடிவுற்று ஜி.என். செட்டி தெரு, திருமலைப் பிள்ளை சாலை சந்திப்பின் அருகில் அமைக்கப்பட்டது.

**கலைவாணர் அரங்க வளாகத்தில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டுள்ள கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திருவுருவச் சிலை திறப்பு**

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தினர், அவரது திருவுருவச்சிலையை அவ்விடத்திலிருந்து அகற்றி சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவ வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்கள்.

அக்கோரிக்கையினை ஏற்று, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் திருவுரு வச்சிலை தற்போது இருக்கும் இடத்திலிருந்து பாதுகாப்பாக அகற்றி சென்னை, வாலாஜா சாலையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் நிறுவப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் 23.6.2025 அன்று அறிவி த்தார்.

அந்த அறிவிப்பின்படி, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, கலைவாணர் அரங்க வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு, மாற்றி நிறுவப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர்

வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் குடும்ப த்தினர், நடிகை செல்வி குமாரி சச்சு, நடிகர்கள் நாசர், கருணாஸ், சரவணன், . போஸ் வெங்கட் உள்ளிட்ட திரைத் துறையை சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.




## சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர்- அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ,பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (06.02.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் சென்னை, வில்லிவாக்கம் எம்.டி.எச் சாலையில் உள்ள டி.கே.ஏ. திருமண மண்டபத்தில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள்-முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## சேலம் கிழக்கில் 'தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம்' மாபெரும் பொதுக்கூட்டம்!

**எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தலைமை! திண்டுக்கல் லியோனி சிறப்புரை!**

சேலம், பிப். 6 –

சேலம் கிழக்கு மாவட்ட ஏற்காடு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டோம் மாபெரும் பொதுக்கூட்டம் வாழப்பாடியில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமை தாங்கினார்.

கூட்டத்திற்கு வாழப்பாடி வடக்கு ஒன்றிய செயலாளர் சக்கரவர்த்தி வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் கழக கொள்கை பரப்புக் குழு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றி னார்.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் டாக்டர் தருண், ஒன்றியச் செயலாளர்கள் மாணிக்கம், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, ராஜேந்திரன், விஜயகுமார், சதீஷ்குமார், ரத்தினவேல், மூர்த்தி, மருதமுத்து, சிவராமன், டாக்டர் வே.செழியன், வரதராஜன், மணி, அழகுவேல், சித்தார்த்தன், பாலமுருகன், முத்துலிங்கம் , சோமசுந்தரம், தமிழ்ச்செல்வன், சங்கர், முனைவர் சீனிவாசன், பேரூர் செயலாளர்கள் செல்வம், பாலமுருகன், வெங்கடேஷ், காங்க முத்து, வெங்கடேஷ்வரன், பாபு, சுப்ரமணி, நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், வேல்முருகன், முன்னாள் எம்எல்ஏ மாதேஸ்வரன் , பள்ளிப் பாளையம் பெரியசாமி, மற்றும் மஞ்சினி செல்வராஜ், அரசு, சசிகுமார், சேகர், செல்வமணி, நகர மன்றத் தலைவர் அலெக் சாண்டர், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் என திரளாக கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிவில் பேரூர் செயலாளர் செல்வம் நன்றியுரையாற்றினார்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்: அரசு பொது மருத்துவமனையில்

## மார்ச் 1-ல் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

**மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**



காஞ்சிபுரம், பிப்.6–

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் – கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான மார்ச் 1 அன்று அரசு பொது மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படும் என்று மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம் அடுத்த. ஏ.ஜே.எஸ்.மஹாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச. இனியரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம் எல்ஏ கூட்டத்தில் கலந்து கொண்டவர்களை அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள் ஓ.எஸ். தினகரன், திருமதி மலர்விழி குமார், சன் பிராண்டு.ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் சி வி எம் பி எழிலரசன், காஞ்சிபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர். ஜெ. ராமகிருஷ்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.சுகுமார், எஸ் ஆர் அப்பாதுரை, மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநில நெசவாளர் அணி ஜி.சுகுமாரன், மாநில இலக்கிய அணி ஆர்.தசரதன், காஞ்சிபுரம் மேயர் திருமதி.மகாலட்சுமி, யுவராஜ். பொதுக்குழு உறுப்பினர்கள் வெளிக்காடு ஏழுமலை, எஸ்.கே.ராஜேந்திரன், எஸ்.சிகாமணி, நகர செயலாளர் கே.குமார், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம். குமார், க. குமணன், டி.குமார், பொன் சிவகுமார், பி.சேகர், பி.எம்.பாபு, சத்ய சாய் கே.கண்ணன், ஜி. தம்பு டிவி கோகுல கண்ணன், ஏழுமலை சிற்றரசு, எம்.எஸ். பாபு, சரவணன், கே.எஸ்.ஆர். கார்த்திகேயன்.

ஒன்றிய குழு பெருந்தலைவர்கள் திருமதி.மலர் கொடி குமார், தேவேந்திரன்,

பகுதி செயலாளர்கள் எஸ் சந்துரு, சு.வெங்கடேசன், அ.தசரதன், கே.திலகர், பேரூர் செயலாளர்கள் என்.எஸ்.பாரி வள்ளல், என்.பாண்டியன், ஆ. சுந்தரமூர்த்தி, மோகன் தாஸ், வி.எழிலரசன், பேரூராட்சி மன்ற தலைவர். செல்வி. சாம்யுக்தா, ஐயனார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் குணசேகரன், ஆ.செல்வி, வ. மலர்மன்னன், நாத்திகம் நாகராஜன், எஸ்.மாலதி, இ.அசோகன், சி. ராதாகிருஷ்ணன், ஜெய்கணேஷ். உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தீர்மானங்களை விளக்கிப் பேசினார் பேசினார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மதுராந்தகம் காஞ்சிபுரம் அரசு பொது மருத்துவமனையில் மார்ச் 1 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் என்று தீர்மானிக்கப்படுகிறது.

பிப்ரவரி 11 திருவிடந்தையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும். B.LA2.. B.LC.. B.DA. கூட்டத்தில் 10.000 பேர் பங்கேற்போம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தமிழ்நாடு தலைகுனியாது சட்டமன்ற தொகுதி வாரியாக சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### சென்னை தென்மேற்கு மாவட்டம்

## தியாகராயர் நகர் கிழக்கு - மேற்கு பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

**பகுதிச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ – கே.ஏழுமலை எம்.சி. அறிக்கை!**

*சென்னை, பிப். 06 -*

*தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ. கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதி தி.மு.க. வட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (06.02.2026 - வெள்ளிக்கிழமை) காலை 12 மணி அளவில், தியாகராயர் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமையில் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தொகுதிப் பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*எனவே கிழக்கு, மேற்கு பகுதி தி.மு.க. வட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.*

*பொருள்:-*

*கழக ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி, தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி.ஆர். அருணகிரி

**பிப்ரவரி 6 (2016)**



**இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**குடியாத்தம் நகரத்தில் மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.**

**குடியாத்தம் நகர கூட்டுறவு வங்கி இயக்குநராக பொறுப்பு வகித்தவர்.**

**1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களுடன் வேலூர் சிறையில் இருந்தவர். அத்துடன், கழகம் அறிவித்த இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### தலைமைக் கழகப் பேச்சாளர் – மாவட்ட ஊராட்சிக் குழு முன்னாள் உறுப்பினர்

## ஒருங்கிணைந்த தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் மகளிர் அணி அமைப்பாளர் திருமதி இரா.தமிழ்ச்செல்வி மறைவு!

**கழகத்தினர் அஞ்சலி!**



*தருமபுரி, பிப். 6-*

*காலஞ்சென்ற மொழிப் போர்த் தியாகி எல்.பி.இராமர் அவர்களின் மூத்த மகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகப் பேச்சாளருமான திருமதி. இரா.தமிழ்ச்செல்வி மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அன்னாரது உடலுக்கு - கழகத்தினர் அஞ்சலி செலுத்தினார்கள்.*


*தர்மபுரி மாவட்டம், இலக்கியம்பட்டியைச் சேர்ந்த (காலஞ்சென்ற) மொழிப்போர்த் தியாகி எல்.பி.இராமர் அவர்களின் மூத்த மகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைக்கழகப் பேச்சாளரும், முன்னாள் ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரும், முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினரும், முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினரும் (DC), இந்நாள் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் - முன்னாள் எம்.பி. வழக்கறிஞர் இரா.தாமரைச் செல்வன், வழக்கறிஞர். இரா.கருணாநிதி, வழக்கறிஞர்.இரா.ஆசைத்தம்பி ஆகியோரின் மூத்த சகோதரியும், வழக்கறிஞர்.பி.உதய சூரியனின் தாயாருமான திருமதி. இரா.தமிழ்ச்செல்வி (68) அவர்கள் 04.02.26 - புதன்கிழமை அன்று மாலை 7 மணியளவில் உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார்.*

*இலக்கியம்பட்டியில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது உடலுக்கு மாநில, மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழகத்தினர், நகர பிரதிநிதி கள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் மலர்மாலை வைத்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தடா தனசேகரன்

**பிப்ரவரி 6 (1992)**



**ஜெயலலிதா அரசின் "தடா" சட்டத்தைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு உயிரிழந்தார் சென்னை 3வது வட்ட இளைஞர் அணியின் தம்பி தனசேகரன்.**

**"தம்பி! உன் தியாகம்; தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து; தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக் கூறி; "அந்த ஆதிதிராவிட இனத்து அடலேறாம் தனசேகரனுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக" என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**